அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.02/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994, ஜனவரி மாதம் 10 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள்,
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்களுக்கும்.

தற்காலிக, அமய, பதில் ஊழியர்களுக்கும், பயிலுநர்களுக்கும் நிரந்தர நியமனங்களை வழங்குதல்.

1993.09.27ஆந் திகதிய 23/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாக இச்சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும்.

02. தற்காலிக, அமய, பதில் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்ட 1993.06.17ஆந் திகதி 14/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் கீழ்வருமாறு நடைமுறைப்படுத்தப்படும்.

03. எழுதுநர்கள் மற்றும் அதனுடன் ஒத்த சேவைகளுக்கு ஆட்சேர்க்கும் போது தற்காலிக, அமய, பதில் ஊழியர்களுக்குச் சலுகைப் புள்ளிகள் வழங்கப்படுவது 1993, மே மாதம் 09ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும். எனவே, 1993.05.09ஆந் திகதிக்கு முன்பு வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, எனினும் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாததும் 1993.05.09 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான மேற்கூறிய தரங்களுக்கு ஆட்சேர்க்கும்போது சலுகைப் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

04. இச் சலுகை 1992.04.01ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கும் 1993.05.09ஆந் திகதி எழுதுநர் மற்றும் நடுத்தர தரங்களில் கடமையாற்றியவர்களுக்கும் அவர்கள் 1993.05.09ஆந் திகதி அல்லது அதன் பிறகு சேவையில் இருந்தமை அல்லது இருக்காமை கருத்திற் கொள்ளாது வழங்கப்படும்.

05. 1993.06.17ஆந் திகதி 14/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் தற்காலிக, அமய, பதில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையை அச்சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்துப் பயிலுநர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

06. 1993.07.01ஆந் திகதி தொடக்கம் அரசாங்க நிறுவனங்களில் நியமிக்கப்பட்டுள்ளவர்களும் எதிர்காலத்தில் நியமிக்கப்படவுள்ளவர்களுமான பயிலுநர்களின் பயிற்சிக் காலத்தை வருடமொன்றாக வரையறுக்க வேண்டும் என்பதுடன் அதை மேலும் நீடித்தலாகாது. 1992.04.01ஆந் திகதி தொடக்கம் 1993.06.30ஆந் திகதி வரை அரசாங்க நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள பயிலுநர்களுக்குத் தாபனத் தலைவரின் அனுமதியுடன் 1994.06.30ஆந் திகதி வரை மேலும் பயிற்சி வழங்கலாம். இந்த வரையறை பொறியியல், மற்றைய நடுத்தர தொழினுட்பச் சேவை ஆகியவற்றின் பயிலுநர்களுக்குட் ஏற்புடையதாகாது.

ஒப்பம்: வை.பி.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.